உ
சிவமயம்



யாழ். வடமராட்சி, கரவெட்டி கிழக்கைப்
பிறப்பிடமாகவும்,
வவுனியா கோவிற்புதுக்குளத்தை
வதிவிடமாகவும்
இலண்டனில் வாழ்ந்து வந்தவரும்
வீரவாகு தேவர் மரபினருமாகிய
உயர் செங்குந்த குல ஒளிவிளக்கு


## அமரர் திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம்

அவர்களது

# அன்னை நினைவமுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் வடமராட்சி கரவெட்டி
கிழக்கைப் பிறப்பிடமாகவும் வவுனியா
கோவிற்புதுக்குளத்தை வதிவிடமாகவும்
இலண்டனில் வாழ்ந்து வந்தவரும்
வீரவாகு தேவர் மரபினருமாகிய
உயர் செங்குந்த குல ஒளிவிளக்கு

அமரர்
திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம்
அவர்களது

அன்னை நினைவமுதம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்னை நினைவமுதம்
அருமை மனைவியாய்
ஆசை அம்மாவாய்
இனிய மாமியாய்
பாசமுள்ள அப்பம்மாவாய்
பரிவுள்ள அம்மம்மாவாய்
நேசமுள்ள பூட்டியாய்
வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமான
எங்கள் குடும்பத்தலைவி
அமரர் திருமதி வள்ளிப்பிள்ளை
முத்துலிங்கம்அவர்களது
பாதக் கமலங்களுக்கு
இம் மலர் சமர்ப்பணம்

**அன்புடன்,**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# அமரர் திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம்



அன்னை மடியில்
26-08-1926



இறைவன் அடியில்
23-01-2014

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விஜய அலர்ந்த தைத் தேய்மதியைப்
பூண்ட ஸப்தமிக்கே போய்ப்புக்காள் - தூண்டுசுடர்
மாதரசி வள்ளிப்பிள்ளை மண்ணுலகம் விட்டீசன்
பாதமலர் நாடியநாள் பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

## யார்க்கரு விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமங் கைகூடி நாளும்
ஒருவா துனதடிமை பேணி - யருளுறவே
சங்கரன் றேவியருள் சண்முகனின் முன்னவனே
தங்கு மியார்க் கருவிற் றான்.

அருளாளர் போற்று மருங்கரவை தன்னிற்
பெருமைசேர் யார்க்கருவிற் பெட்பார்-ஒருகைமுகன்
இட்டசித்தி யாவுமினிதருளி யிவ்வுலகிற்
பட்டமுடன் வைப்பான் பதி.

உயர் சைவத்திரு. க. பொன்னம்பல உபாத்தியாயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
    அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
    புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
    செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
    கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
    மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
    திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்(டு) உள்ளங்
    குளிரஎன்கண் குளிர்ந்தனவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி! போற்றி!

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம மர்ந்தபெரு மானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)
சிவனது அநாதி முறைமையான பழமை
திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண் நுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய்யா யினவெல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அளிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்குமூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்ச்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்று இன்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண் ஆர் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகலகலா வல்லி மாலை

## உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே

## நாற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே

## கலைமகள் அருளிய குளிக்க விரும்புதல்

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே

### கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே

### நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

### பண்ணும் பரதமும் நல்கிட வேண்டும்

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே

### பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே

## சொல்லின் வன்மை பெருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

## சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே

## மன்னர் தன்னையும் பணியச் செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைத் தாமரை

ராகம்: பீம்ப்ளாஸ்ஸ்ரீ தாளம்:ஆதி

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள் (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரங் கோபுரங் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள் (வெள்ளை)

-மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# ஸ்ரீ அபிராமிப் பட்டர் அருளிய
# அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே.

பூத்தவளே புவனம் பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றஓர் தெய்வம் வந்திப்பதே.

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்பு அறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே!

இல்லாமை சொல்லி ஒருவர்தம் பால்சென்று இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகு எங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கி நிற்பாள் என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என்ஐயனுமே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்ட மெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளை புவி அடங்கக்
காத்தாளை அம்குச பாசாங் குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அபிராமிப் பதிகம்

1. கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நடபும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

2. சலதியுல கத்திற் சராசரங் களையீன்ற
தாயா கினால் எனக்குந்
தாயல்லவோ? யான்உன் மைந்தன் அன்றோஎனது?
சஞ்சலம் தீர்த்து நின்றன்
முலைசுரந் தொழுகுபா லூட்டிஎன் முகத்தைஉன்
முன்தானை யால்து டைத்து
மொழிகின்ற மழலைக் குகந்து கொண் டிளநிலா
முறுவல்இன் புற்றரு கில்யான்
குலவிளையாடல் கொண்டருண் மழைபொழிந்து அங்கை
கொட்டி வாவென்று அழைத்துக்
குஞ்சரமுகன் கந்தனுக்கு இளையவன் என்றெனைக்
கூறினால் ஈனம் உண்டோ?
அலைகடலிலே தோன்றும் மாறாத அமுதமே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராகுகால துர்க்கா அஷ்டகம்
## (ஹரிவராஸனம் மெட்டில் பாடவும்)

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை ஆனவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மையானவள் துர்க்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிறு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா! அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலி மாயவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

ராகுதேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரத்தகனத் துர்க்கையே
அன்பு துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்னை துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

(தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே என்ற நாமம் வரும் போது விரதம்இருப்பவர்கள் நமஸ்காரம் செய்வது நல்லது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ காயத்ரி மந்த்ரம்

ஓம் பூர்வபுவஸ்ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந ப்ரசோதயாத்

## ஸ்ரீ ஸத்ய ஸாயி காயத்ரி மந்த்ரம்

ஓம் ஸாயீச்வராய வித்மஹே
ஸத்யதேவாய தீமஹி
தன்னச்சர்வ ப்ரசோதயாத்
ஸாயிராமாய வித்மஹே
ஆத்மா ராமாய தீமஹி
தந்நோ பாபா ப்ரசோதயாத்

## மஹா மிருத்யுஞ்ஜய மந்த்ரம்

ஓம் த்ரயம் பகம் யஜா மஹே ஸுகந்திம்
புஷ்டி வர்த்தனம்: உர்வாருகமிவ பந்தனாத்
ம்ருத்யுர் முஷிய மாம்ருதாத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்களரூபிணி மதியணிசூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்ட நல் கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாருனில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எங்குலத் தழைத்திட எழில் வடிவுடனே எழுந்த நல்துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்ச நல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேலனைக் கொடுத்த நல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்து நற் சக்தியெனும்மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி

எண்ணிய படிநீ யருளிட வருவாய் எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய் பல்கிட அருளிடுவாய்
கண்ணொளியதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி

இடர் தரும் தொல்லை இனிமேல் இல்லை யென்று
நீ சொல்லிலிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறும் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில், பரிதியாய் வந்து பழவினை ஒட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்ஷி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துர்க்காதேவி சரணம்

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்

துர்க்கை அம்மனைத் துதித்தால்
என்றும் துன்பம் பறந்தோடும்
தர்மம் காக்கும் தாயும் அவளே
தரிசனம் கண்டால் போதும்
கர்மவினைகளும் ஓடும்
சர்வ மங்களம் கூடும்
பொற்கரங்கள் பதினெட்டும்
நம்மை சுற்றிவரும் பகை விரட்டும்
நெற்றியிலே குங்குமப்பொட்டு
வெற்றிப் பாதையைக் காட்டும்
ஆயிரம் கண்கள் உடையவளே
ஆதிசக்தி அவள் பெரியவளே
ஆயிரம் நாமங்கள் கொண்டவளே
தாய்போல் நம்மைக் காப்பவளே
சங்கு சக்கரம் வில்லும் அம்பும்
மின்னும் வாளும் வேலுடன் சூலமும்
தங்கக் கைகளில் தாங்கி நிற்பவள் - அம்மா
தங்கக் கைகளில் தாங்கி நிற்பவள்
சிங்கத்தின் மேல் அவள் வீற்றிருப்பாள்
திங்களை முடிமேல் சூடிநின்றாள்
மங்கள வாழ்வும் தந்திடுவாள்
மங்கையற்கரசியும் அவளே
அங்கயற் கண்ணியும் அவளே

ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்
ஜெய ஜெய தேவி ஜெய ஜெய தேவி
துர்க்காதேவி சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE MOUNTAIN STORY

A son and his father were walking in the mountains.Suddenly, the son falls, hurts himself and screams: "AAAhhhhhhh!!!"

To his surprise, he hears the voice repeating somewhere in the mountain:"AAAhhhhhhhhhhhhhhhh!!!!"

Curious, he yells: "Who are you?"

He receives the answer: "Who are you?"

Angered at the response, he sceams: "Coward" He looks to his father and asks, "What's going on?"

The father smiles and says: "My son pay attention," and then he screams to the mountain: "I admire you!"

The voice answers: "I admire you!"

Again the man screams " You are a champion!"

The boy is surprised, but does not understand.Then the father explains: "People call this ECHO, but really this is LIFE. It gives you back everything you say or do. Our life is simply a reflection of our action. If you want more love in the world, create more love in your heart. If you want more competence in your team, improve your competence. This relationship applies to everything, in all aspects of life:life will give you back everything you have given to it.

**Your life is not a coincidence.**
**It's a reflection of you!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடு

இயற்கை எழில் கொஞ்சும் ஈழவளநாடு.
இதிலே சிறந்த ஒரு பிரிவு யாழ்ப்பாணம்.
அதிலே பெருமையுடையது வடமராட்சி.
வடமராட்சியிலே சிறந்த ஒரு கிராமம் கரவெட்டி கிழக்கு இங்கு,
யார்க்கரு விநாயகர், கனகராவளவு பிள்ளையார், அத்துளு அம்மன், நுணுவில் பிள்ளையார், பத்திரகாளி அம்மன், கட்டைவேலித் திருச்சபை தெய்வ வழிபாட்டுத் தலங்கள் அருள் சுரக்கும் வளமான வயலும் வயல் சார்ந்த பிரதேசம்

"நந்தூரும் செஞ்சாலி நாற்புறமும் சூழ் கரவை"
"பாவலரும் பூசுரரும் பண்ணிசைக்கும் வண்டினமும்
காவலரைச் சூழும் கரவை"

என கவிஞர்களால் பாடப்பட்ட பதி இது.

இப் பதியிலே சிறப்பாக வாழ்ந்த வர்த்தகரான கந்தையா-ஆழ்வாத்தை தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாக வள்ளிப்பிள்ளை 26.08.1926 இல் பிறந்தார். மூத்த சகோதரிகள் லட்சுமி, பார்வதி சகோதரன் பாஸ்கரமூர்த்தி (அம்மான்). இளைய சகோதரன் திரு. பாஸ்கரமூர்த்தி அவர்கள் வவுனியா சின்னப்புதுக்குளத்தில் ஆரோக்கியமாகச் சிறப்பாக வாழ்கிறார். வள்ளிப்பிள்ளை தனது கல்வியை கட்டைவேலி மெதடிஸ்மிஸன் பாடசாலையில் சிறப்பாகக் கற்றார். அக் காலப்பகுதியில் இப் பாடசாலை உயர் வகுப்புக்களைக் கொண்ட பாடசாலையாக விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

திருமண வயதை எய்தியதும் யாழ் நல்லூர் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திரு. தம்பு - பார்வதி தம்பதிகளின் புதல்வன் முத்துலிங்கத்தை 19.10.1947 ஆம் ஆண்டு திருமணம் செய்தார் திரு முத்துலிங்கம் ஆசிரியர் சிறந்த ஆங்கிலப் புலமையாளர். நல்ல பாடகன் - நடிகன், சமூகத் தொண்டன் தம்பதிகள் வவுனியா கோவில் புதுக்குளத்தை வாழ்விடமாகக் கொண்டனர். திருமணப் பயனாக சதானந்தன், சிவானந்தன், விவேகானந்தன், தற்பரானந்தன் என்போரை ஆண் மக்களாகவும் அருள் ரஞ்சிதம், ஆனந்த ரஜனி என்னும் பெண் மக்களையும் பெற்றுச் சீராட்டி வளர்த்தார்.

பிள்ளைகளை டாக்டராகவும் பட்டதாரிகளாகவும் ஆளாக்கினார். மதனலோசினி, நாகராணி, பரிமளாதேவி, ஆதி, பரிமளநாதன் என்போரை மருமக்களாகக் கண்டு மகிழ்ந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவிசங்கர், லலித்சங்கர், சுதாசங்கர், தீபாசங்கரி, துவாசிகா, தனுசன், அரிசன், மைதிலி, மதன் என்போரின் அப்பம்மாவாக மகிழ்ந்து கொண்டவர்.

பவன், குமரன், ரூபன், தாரணி, சயந்தன், என்பவர்களின் அம்மம்மா என அழைக்கும் பாக்கியம் பெற்றவர்.

சங்கர், ஜீவிதா, ஈஸ்வர், லோகன் ஆகியோரின் பூட்டியாக பெருமை அடைந்தவர்

பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகளால் மகிழ்வு கண்டவர்.

வளமான வாழ்வு,
சுற்றம் சூழ வாழ்தல்,
அயலவர் நேசிப்பு
இவைகளே இவரின் சுவாசம்.

இறுதிக் காலம் நோய்வாய்ப்பட்டு கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள், சகோதரன் கலங்க 23.01.2014 இல் இவ்வுலகை நீத்தார்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

## கிருபானந்த வாரியாரின் அருள் மொழிகள்

மக்களை வளர்க்கும் தாய் தந்தையர் மக்கள் பொருட்டாவது மிக மிக நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் நடந்துகொள்ள வேண்டும்.

நல்ல சூழ்நிலையில் வளர்ந்த பிள்ளைகள் தங்கள் ஆயுள்வரை ஒழுக்கமாக இருப்பார்கள்

மக்களைப் பெறுகின்றவர்கள் மனம் மொழி மெய்களினால் தூயவராக நின்றால்தான் நன்மக்கள் தோன்றுவர்.

இறைவனின் திருடியில் மனதைச் செலுத்தி நான் எமது என்ற இரண்டையும் விட்ட ஒருவனுக்கு கவலையிராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி முத்துலிங்கம் வள்ளிப்பிள்ளை அவர்களது கடந்த கால நினைவலைகள்

எமது அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய சகோதரி அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்த செய்தி எம்மை வாட்டுகின்றது. இச் சந்தர்ப்பத்தில் அவருடன் பழகிய பசுமையான பழைய நினைவுகள் என் மனதில் மீண்டு வருகின்றன.

எமது சகோதரி அவர்கள் மென்மையான பேச்சு சிரிப்பூட்டும் கதைகள், இறையன்பு நிறைந்தவராய், தன் திறமைகளை வெளிக்காட்டாது, அமைதியாக வாழ்ந்த ஒருவர். 1975ம் ஆண்டு முதல் வவுனியா கோவில்புதுக்குளம் மாதர் கிராம முன்னேற்றச் சங்கத்துடன் இணைந்து செயற்பட்டார் 1976ம் ஆண்டு (24-11-1976) சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் ஆலோசனைக்கிணங்க இந்து மகளிர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அதில் தனாதிகாரியாக 10 வருடங்களுக்கு மேல் செயற்பட்டார்.அதன் மூலம் கோவில்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தின்பணிகள் பல தொடர்ந்தன. ஆலயத்தை மையமாகக் கொண்டு எமது கிராமத்தில் இளம் சந்ததியினருக்கு பல முன்னேற்றகரமான செயற்பாடுகள் நடைபெற்றன.

01 - சமயப் பெரியார்களை வரவழைத்து சொற்பொழிவுகள் இடம்பெற்றமை

02 - கூட்டுப் பிரார்த்தனை, வீட்டுப்பிரார்த்தனைகள்.

03 - பாதயாத்திரைகள் செய்யப்பட்டன

04 - பிரம்ம குமாரிகளின் தியான வகுப்புக்கள்.

05 - குழந்தைகளின் தேவார மனனம், திருக்குறள் மனனம்,பேச்சுப் போட்டிகள், பூமாலை தொடுத்தல், கோலமிடல் போன்ற செயற்பாடுகள்.

06 - இளைஞர்களால் ஆலயத்தில் கிணறு வெட்டிக் கட்டியமை.

07 - வீதிகளில் திருவெம்பா பஜனை.

08 - சமயத் தீட்சைகள், ஏடு தொடக்கல்.

இது போன்ற செயற்பாடுகளுக்கு அயராது உழைத்த பெருந்தகை.

மேற்குறித்த செலவுகளை ஈடுசெய்ய பிடியரிசி சேர்த்தல், கடை கடையாகச் சென்று நிதி திரட்டல் வீபூதி முறைப்படி தயாரித்து விற்பனை செய்தல் போன்ற அரிய செயற்பாடுகளால் நிதியைப் பெற்றதோடு ஆலயவளர்ச்சியும் இடம் பெற்றது.

அவ்வாறு அன்போடு பூஜிக்கப்பட்ட கோவில்குளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தி விநாயகர்தான் இன்றும் அருள்பாலித்துக்கொண்டிருக்கும் மூத்த விநாயகராக கோவில் கொண்டு சிவன் ஆலயத்தில் திகழ்கின்றார்.
இவையெல்லாம் எமது அம்மையாரின் பணிக்கு அழியாத சான்றுகளாகும். சகோதரி எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரின் பணிகள் வெவ்வேறு வடிவங்களாகி எமது ஊரில் ஊறியிருக்கிறது. எமது மனங்களில் அவரின் நினைவுகள் என்றும் நீங்காது.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல சித்தி விநாயகரின் அருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

சகோதரி
திருமதி.பா.நல்லதம்பி
கோவிற்புதுக்குளம்
வவுனியா

## சுவாமி சச்சிதானந்த யோகிராஜ்
அவர்களின் அருளமுதம்

உண்மையே பேசுக
நன்மையே பேசுக
அளவாகப் பேசுக
மெதுவாகப் பேசுக
இனிமையாகப் பேசுக
சிந்தித்துப் பேசுக
சமயமறிந்து பேசுக
சபையறிந்து பேசுக
பேசாதிருந்தும் பழகுக.

பசியறிந்து உண்க
பகிர்ந்தளித்து உண்க
அளவறிந்து உண்க
ஆறுதலாக உண்க
நன்கு மென்று உண்க
நல்ல உணவு உண்க
கனிகள் நிறைய உண்க
கடவுள் நினைவில் உண்க
உண்ணாதிருந்தும் பழகுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சாச்சி

வள்ளிப்பிள்ளைக் குஞ்சாச்சி காலமாகி விட்டார்.-இது தொலைபேசிச் செய்தி.

ஒரு நிமிடம் மன உறைவு, கண்ணீர். அவ நோயாக இருந்தது தெரிந்தபடியால் எதிர்பார்த்த நிகழ்வு

எங்களது அம்மா தங்கரத்தினம் ஆசையம்மா பார்வதி, வள்ளிப்பிள்ளைக் குஞ்சாச்சி, பாஸ்கரஅம்மான் எமது தாய் வழி உறவு

இராம லட்சுமணன் போன்று கரவெட்டி கிழக்கில் வாழ்ந்தவர்கள் இருவர் ஒருவர் கந்தப்பா என அழைக்கப்பட்ட கந்தையா மற்றவர் கதிர்காமு. கதிர்காமுவின் மகள் எங்களது அம்மா கந்தப்பாவின் பிள்ளைகளில் நாங்கள் தெரிந்த அறிந்த தாய்மார் இருவர் ஆசையம்மா முன்னரே போய்விட்டார்.

இன்று வரை வாழ்ந்து வணக்கத்துக்குரியவராய் நீங்களும் பாலு என்று வாஞ்சையுடன் அழைக்கும் குரல். சிரித்த முகம். தென்கிழக்காசியாவின் சந்திர வட்ட முகம். அதில் மலரும் புன்னகை. உடை நேர்த்தி. யாவும் தங்களின் சொத்து

"யாரொடும் பகை கொளல்"

என்ற பேரோடு வாழ்ந்த - பெருமாட்டி

கட்டைவேலி மெதடிஸ் மிசன் பாடசாலையில் கல்வி கற்றீர்கள். தங்களுடன் படித்தவர்கள், கீழ் வகுப்பில் படித்த தங்களை அறிந்தவர்கள் கந்தப்பாவின் வள்ளிப்பிள்ளை எப்படி உள்ளார் என்று சுக நயம் விசாரிப்பவர்கள் இன்றும் கரவெட்டியில் உள்ளனர்.

வவுனியாவில் வாழ்ந்து பட்டதாரிப் பிள்ளைகளை நெறிப்படுத்தி அவையில் முந்தி இருக்கச் செய்தீர்கள்.

வவுனியாப்பிரிவில் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த வரை படித்து உயர்தர விஞ்ஞான வகுப்பு வசதி இன்மையால் மகாஜனாவில் தம்பிமார் சதானந்தன் சிவானந்தன் இருவரையும் படிப்பித்து வவுனியாவின் முதல் மருத்துவ மாணவனாக தம்பி சதானந்தத்தை கண்டு மகிழ்ந்தீர்கள்.அதே போல் ரஞ்சி தொடக்கம் எல்லோரையும் உயர்கல்வி படிக்க வைத்தீர்கள் இன்றைய வசதிகள் அப்போது இல்லை.

பேராதனை கொழும்பு பல்கலைக்கழகங்கள் மட்டும் தான். ஒரு ஆசிரிய வருமானத்தில் பிள்ளைகளை உயர்தரக் கல்வி கற்க வைத்த குடும்பம். கரவெட்டி கிழக்கு மாதர் சங்க ஆண்டு விழாவிலே எடுத்த குறூப் போட்டோவில் நீங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்துள்ளீர்கள்.முன் மாதிரியான பெண்மணி என புகைப்படம் பேசுகிறது. நீங்கள் சமுதாய முன்னேற்றம் பெண்கல்வி பற்றி சிந்தித்தவர்.

பிள்ளைகள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதிய போது நீங்களும் படித்து பரீட்சை எழுதிய சாதனை மறக்க முடியாது .கரவெட்டி கிழக்கிலே தங்கள் தந்தையார் வீடு ஒரு "அமுத சுரபி" என்று தான் சொல்ல வேண்டும். இன்று புலம் பெயர்வால் பொலிவிழந்து விட்டது.

கோவில் குளத்தில் புதிதாக அமைத்த வீடு. அங்கு பலமுறை வந்துள்ளேன். தம்பி சதானந்தன் திருமதி சதானந்தன் புகைப்படம் பெற்று வந்து கரவெட்டியில் காட்டிய ஞாபகம் தற்பர், விவேகன் ரஜனி சின்னப்பிள்ளைகள். கோவில் குள வீட்டில் பிள்ளைகள் குடும்பம் எல்லோரும் வாழ்ந்த சிறப்பை எண்ணிப் பார்க்கிறேன்.

புலம்பெயர்வு காலத்தின் தேவையாகிய போது இடம் பெயர்ந்தீர்கள்.சென்ற இடத்தில் சிறப்பாக வாழ்ந்தீர்கள். உறவுகளைப் பேணல்-சுகநலன் அக்கறை ஆர்வம் பிள்ளைகளுக்கு தகப்பன் வழி முதுசம்.

நீங்கள் பெரிய ஆலமரம் விழுதுகள் வேரூன்றியுள்ளன.

சக்தி பிரிந்த நிலையில் கவலையில் முத்துலிங்கம் குஞ்சியப்பு.

மகன்மார் மகள்மார் சோகம் கொள்ள,

மருமக்கள் வாட, பேரப்பிள்ளைகள் கண்கலங்க

பூட்டப் பிள்ளைகள் துயருற நீங்கள் பிரிந்து விட்டீர்கள்.

பிரிவு நடந்து தான் ஆக வேண்டும். இது இறை நியதி

"தென்புலத்தார் தெய்வம்"

இதனை வள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார்.

தெய்வமாக நின்று மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள், பூட்டப்பிள்ளைகள் யாவரையும் வழி நடத்தி ஆசி வழங்குமாறு வேண்டுகிறோம்.

தங்கள்
பெறாமகன்
ந. பாலசுப்பிரமணியம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர். கொடிகாமம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thank you for asking me to write a few words about my friend and "aunty" Vallipilai (though we are the same age!)

I remember her nearly 80 years ago at Kaddaiveli Tamil Mission School when we studied together for about 3-4 years till 3rd Standard. I must say I cannot recall much of those early days.

I moved to another school and we lost touch till about 10 years later when we were both married. I remember her wedding day as well as my son was born on the same day and I was told that when the news reached the wedding party this too was celebrated. We met off and over the next few years and I recall a busy but happy lady with her children around her.

Our paths separated again, as I left the country, and it was nearly 40 years later that we met again in UK. That's when our friendship took off. Though we did not meet that often, we felt close when we spoke on the phone. I was glad to get to know this happy, kind lady who was also blessed with a peace loving nature, bringing people together in her own way.

Her last 3 years, though were very difficult was inspirational to all who met her. Her loving family cared for her with total devotion as she would've cared for them. When we chatted on Skype, she was always smiling, her memory was sharp and her speech so clear, showing that she was clearly a "fighter" and did not give up easily.

May her soul rest in peace.

Mrs. Mangayarkkarasi Arumugam
February, 2nd, 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தமிழில் திருக்குறள் எவ்வளவு நன்றாக வள்ளிப்பிள்ளையின் வாழ்க்கையை எடுத்துக் காட்டுகின்றது என்பதனை கூற விரும்புகிறேன்.

"மங்கலம் என்பது மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

இவர்கள் சிறந்த மனைவியாகவும் நல்ல பிள்ளைகளுக்குத் தாயாகவும் இருந்துள்ளார்கள்.

இயல்பாகவே நற்குணங்களாகிய அன்பு ஆற்றல் கருணை பொறுமை விருந்தோம்பல் சினமின்மை போன்றவற்றை கொண்டவர்கள். இப்படிப் பட்ட சீரிய குணசாலியை இழந்து விட்டோம். அவரது பிரிவால் துயருறும் அனைவருக்கும் கடவுள் கருணை காட்டி நல்வாழ்வு வாழ அருள் புரிய வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மங்கையர்க்கரசி ஆறுமுகம்
02-02-2014

**பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் சிந்தனைத் துளிகள்**

1. ஆகாயத்தில் மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைக்குமானால் அதன் பிரகாசமும் மறைந்து போகும். அது போல மனத்தில் அகங்காரம் இருக்கும் வரையில் அதில் ஈசுவர ஜோதி பிரகாசிக்காது.

2. அகங்காரம் இருக்கும் வரையில் ஞானமும் முக்தியும் கைகூடாது. பிறப்பும் இறப்பும் இருந்தே தீரும்.

3. மழைத் தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்திற்கு ஓடி வந்து விடுகின்றது. அதுபோல் இறையருள், தற்பெருமையும், கர்வமும் உள்ளவர்களுடைய உள்ளத்தில் தங்கி நிற்பதில்லை. பணிவுள்ளவர்கள் உள்ளத்தில் தான் தங்கி நிற்கும்.

4. 'என் செயலாவது யாதொன்றுமில்லை' என்னும் கொள்கை மனத்தில் உறுதியாக நிலைக்குமானால், மனித னுக்கு இந்தப் பிறவியிலேயே முக்தி உண்டாகும். அதன் பிறகு அவனுக்கு வேறொரு பயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயத்தில் நிறைந்த சின்னக்காத்தை

கரவெட்டி கிழக்கின் கவினுறு குடும்பம் கந்தப்பா ஆழ்வாத்தை தம்பதிகள் கண்ட புதல்விகள் மூவர் இளைய புதல்வன் ஒருவன் எல்லோரதும் செல்லத்தம்பி ஆத்தை அப்பு மூத்த சகோதரிகள் இறைவனடி சேர்ந்துவிட நானும் நீங்களும் தான் இருந்தோம். சின்னக்காத்தை இன்று நீங்களும் பிரிந்து விட்டீர்கள். என்ன செய்வேன் நான். தம்பி என்று தூக்கி அணைத்ததும் பாடசாலைக்குக் கூட்டிச் சென்றதும் தந்தை எனக்காக வீட்டில் ஒழுங்கு செய்த ஆங்கில ஆசானிடம் நான் கற்றதை விட கேள்வி ஞானத்தால் நீங்கள் கற்றதும், அப்பு வியாபாரத்துக்காக வன்னி செல்லும் போது பாடசாலை விடுமுறை நாட்களில் கூட நானும் நீங்களும் வவுனியா சென்றதும் சிங்களம் கதைப்பதும் மறக்கமுடியுமா சின்னக்காத்தை?

என் பிள்ளைகள் எல்லோரும் சின்னமாமி என்றுதான் உங்களை அழைப்பார்கள். அவர்களின் பாசத்துக்குரிய சின்னமாமி நீங்கள். என் மனைவியும் சின்னமாமி என்று தான் உங்களை அழைப்பதுண்டு.

1998 இல் நீங்கள் இலங்கை வந்து சில மாதங்கள் நின்றீர்கள். பல வருடங்களின் பின் நாங்கள் கூடிக் களித்து மகிழ்ந்தோம். மீண்டும் நீங்கள் இலங்கை வருவீர்கள் என நினைத்திருந்தோம் ஆனால் 2011இல் நீங்கள் நோய்வாய்ப்பட்டீர்கள். 2014இல் எங்களை விட்டுப் பிரிந்து விட்டீர்கள்.

யாரையும் கடிந்து பேசாத உங்கள் குணம்
எல்லோருக்கும் உதவும் உங்கள் மனம்
யாவரிடமும் நீங்கள் காட்டும் அன்பு பாசம் பரிவு
தம்பி என்றும் மச்சாள் என்றும் மருமக்கள் என்றும் என் மீதும்
மனைவி பிள்ளைகள் மீதும் காட்டும் நேசம்
என்றும் எங்கள் மனமதில் நிலைத்து நிற்கும்.

ஆண்டவனடியில் ஆத்ம சாந்தி பெற்றிடுக.

என்றும் அன்புத் தம்பி
பாஸ்கரமூர்த்தி
சின்னப்புதுக்குளம் வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம் ஒரு பெண்திலகம்

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி கல்லாய் மனிதராய் செல்லா நின்ற இத்தாவர சங்கமத்தால் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் எனும் மணிவாசகப் பெருமான் வழங்கிய சிவபுராண தத்துவத்திற்கு ஏற்ப சகல செல்வங்களையும் அனுபவித்து தன் பிறவிக்கடன் முடித்து பரப்பிரம்மம் ஆகினார் திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம். இலண்டன் மாநகரிலே தனது கடைசிக்காலத்தை கழித்த வள்ளிப்பிள்ளை மாமியின் கணவர் திரு. முத்துலிங்கம் தனது ஆசிரியப்பணியை எத்துணை சிறப்பாக செய்து வந்தாரோ அந்தளவு கச்சிதமாகவும் ஈடுபாட்டுடனும் ஆத்மார்த்தமாகவும் குடும்பப் பணியை வள்ளிப்பிள்ளை மாமி செய்துள்ளார் எனலாம். ஆறு பிள்ளைகளை பெற்று வளர்த்து இன்று சமூகத்திலே பேரும் புகழுமாய் வாழ வைத்த சிறப்பு முத்துலிங்கம் மாமாவுக்கும் வள்ளிப்பிள்ளை மாமிக்கும் உரிய விசேட சிறப்புக்களாகும்.

இவர்களின் பிறப்பு வளர்ப்பு எல்லாமே எங்கள் கீர்த்தி மிகு கரவெட்டிக் கிராமம் தான். இக்கிராமத்துக்குரிய அறிவியல் தேட்டம் சுறுசுறுப்பு எல்லாமே முத்துலிங்கத்தாரிடம் நிரம்ப உண்டு. கடந்த மூன்று ஆண்டுகள் வள்ளிப்பிள்ளை மாமியை உடல் நோய் தாக்கிய போதிலும் செந்தளிப்பும் கலகலப்பும் சிறிதும் குலையாமல் சகலரோடும் இதமாகப் பேசும் அழகை நான் நிரம்ப நேரில் இரசித்திருக்கிறேன். பல ஆண்டுகள் மாமியை நேரில் காணாமல் இருந்த நிலையில் 2012 இல் நோயுடன் கட்டிலும் ஆளுமாக சந்தித்தோம். மாமியின் மகள் இரஞ்சி அம்மா இவ யாரென்று சொல்லுங்கோ பார்ப்போம் எனக்கேட்ட நொடியில் இது எங்கடை யோகா பாலச்சந்திரன் எனச் சொன்னதும் உண்மையில் திகைத்துப் போனேன். வள்ளிப்பிள்ளை மாமி தனக்குப் பணிவிடை செய்ய வரும் அரசப்பணியாளர்களோடும் (carers) மிக நெருக்கமாகவும் அன்பாகவும் கலகலப்பாகவும் பேசிப்பழகினார்.

வள்ளிப்பிள்ளை மாமி1950களில் கரவெட்டி மாதர் சங்கத்திலே தலைவியாகப் பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. மாமி எனது அம்மா செல்லம்மா வல்லிபுரத்தோடு நெருங்கிய தோழி. நல்லூர் கள்ளியங்காடு பகுதிகளுக்கு வந்தால் எங்கள் அம்மாவை சந்தித்து பல மணி நேரம் பேசிக் களித்த பின்னரே கரவெட்டிக்குத் திரும்புவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87ஆண்டுகள் வாழ்ந்து ஈசனடி சேர்ந்து விண்ணுலகம் எய்திவிட்ட வள்ளிப்பிள்ளை மாமியின் ஆத்மா விண்ணுலகில் பரமசுகம் காணும் என்பதில் ஐயமில்லை. அவரது ஆத்மா நிச்சயம் திவ்ய சுகம் காணும்.

அன்புடன்
யோகா பாலச்சந்திரன்
(முன்னாள் Journalist இலங்கை)
கனடா

## கிருபானந்த வாரியாரின் அருள் மொழிகள்

பிள்ளைகளை எந்தமுறையில் நாம் பழக்குகின்றோமோ அதற்கு ஏற்றவாறுதான் பிள்ளைகளின் குணம் அமைகின்றது.

ஒரு விருந்தினன் எந்த இல்லறத்தானிடத்தில் வந்து பட்டினியாக இரவைக் கழிக்கின்றானோ அந்த இல்லறத்தான் மீளா நரகத்திற்கு ஆளாகின்றான்.

தருமம் குன்றி உலகத்தில் கொடுமைகள் கோரத் தாண்டவம் ஆடும்போது அவதாரம் பிறப்பெடுக்கும்.

பலரும் வெறுக்கும் படியாகப் பயனற்ற சொற்களை ஒருவன் சொல்லுவானாயின் அவன் யாவராலும் இகழப்பெறுவான்.

அமைதி, மகிழ்ச்சி, ஆறுதல், சுகம் என்பன மனதில் இருந்து உண்டாகின்றன. மனதைச் செம்மையாக வைத்துக் கொண்டவன் இன்பமாகவும் மற்றவன் துன்பத்துக்கும் ஆட்படுவான். எனவே இன்பமும் துன்பமும் மனதிலிருந்து உண்டாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

கரவெட்டி கிழக்கை பிறப்பிடமாகவும் வவுனியா கோவிற்புதுக்குளத்தை வாழ்விடமாகவும் லண்டனை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை முத்துலிங்கம் அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு வழங்கிய அனுதாபச் செய்தி.

"மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா"

என்றதிற்கிணங்க இதற்குச் சரியான உதாரண பெண்ணாக வாழ்வாங்கு வாழ்ந்து இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டார் எம் பாசம் நிறைந்த குஞ்சி அம்மா.

இவர் சிறந்த கணவன், புகழ் பூத்த பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் பெற்று வாழ்ந்த மாதரசி ஆவார். இவர் கல்வி, செல்வம், நன்றி, சீவகாருண்ணியம், இறைபக்தி, உறவினர் அரவணைப்பு, நண்பர் நலன் பேணல் ஆகிய நற்குணங்கள் நிறைந்து நிறைவாழ்வு வாழ்ந்து எல்லோர் மனத்திலும் நீங்கா இடம் பெற்ற மாதரசி. இவர் இப்படியாக நிறைவாழ்வு வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் சிவப்பேறு பெற்றார். அன்னாரது ஆன்மா சிவனடியின் கீழ் நீங்கா இடம் பெறவேண்டும் என ஸ்ரீயார்க்கரு ஐங்கரனை மனம் மொழிகளால் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

எங்கள் மனமார்ந்த அனுதாபம் குடும்பத்தார்க்கு உரியது. அவரது ஆன்மா முத்திப்பேறு அடைவதாக!

நன்றி வணக்கம்.

இதை வழங்கியோர்
செல்லையா வல்லிபுரம் B.A.,
(JUSTICE OF THE PEACE)
திருமதி பிரேம சியாமளா வல்லிபுரம்
"சிவசெல்வ வாசா",
கரவெட்டி கிழக்கு
கரவெட்டி
சிறி லங்கா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY THOUGHTS OF AMMA

I came to know Amma when Ranji's children and my children were attending West London Tamil School in Greenford in the 1990's.

Her readymade smile and her ability to talk about many events that happened well before my birth very much impressed and our friendship grew stronger and stronger over the years. Whenever I saw her, whether at the Tamil School sports/ cultural events or at any other social events, I will always give her a hug and stroke her shoulders. It was a pleasure to listen to her, and I've learnt quite a bit of our family and community from her; they were in fact some golden nuggets!

In the last two years it became fairly a weekly routine of seeing her every time I went to Ranji's to tutor her son Ruban. If Amma was awake I will make sure to talk to her, mostly after my session with Ruban or sometimes before and after, while gently rubbing her shoulder and forehead. I was fascinated with her sharp memory and her sense of humour. Sometimes you don't realize the passage of time.

Her outlook on life was very pragmatic even though she was bed- ridden for a couple of years. I've never heard her complaining or expressing any sad feelings of her plight. She wholeheartedly accepted the affects of her first stroke and made the most of her life from then onwards. Her husband, their children, the in-laws and the grandchildren rallied around her, showed her love and tried to make her happy and comfortable. She reciprocated their love and devotion by not showing any emotion or sorrow. She found various ways to keep her happy and others in wonder and amused (for example, adopting her paralyzed arm as her 7th child). As Dr. Mathana Satha stated in her eulogy, at the funeral, Amma externalized her sorrows which gave her long life.
It was a pleasure and a privilege to have known Amma albeit for a few year. My wife, Rani and our family think of her in our prayers.

Amma, please rest in peace.

Babu Ram Pascaran



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயூரியின் இதயத்திலிருந்து

அன்பும் பண்பும் பாசமும் மிக்க என் அழகான பாட்டியவர்
அவனியிலே வாழ்ந்திட்ட அன்புத் தெய்வம்
ஆசையுடனே அணைத்துக் கொள்ளும் அன்பின் உருவம்
இனிமையாகப் பேசும் இயல்புடன்
இவ்வுலகில் வாழ்ந்திட்ட பெண்மணி
கரவை மண் கவினுறு சிறப்படைய
களிப்புடனே அமைத்திட்டார் மாதர் சங்கம்
தலைவியாய் அரும்பணியாற்றி
அங்கிருக்கும் காரியங்கள் செய்வதற்கு
ஆக்கினார் மருமகளைக் காரியதரிசியாக
அவ்வண்ணமே உருவான மாதர் சங்கம்
அவனியிலே பெற்றது பெரு மதிப்புத்தானே!
சிறிய உருவம் கொண்டவர் என் பாட்டி
சிந்தையிலே இருத்தினார் பர்மா தேசம் தனை
சிந்தித்துச் சிந்தித்து கூறுவார் என் பாட்டி
சிறார்களுக்கு கற்பியுங்கள் ஆங்கிலத்தை என்று
பக்குவமாய் பாட்டி காட்டிய பாதை தனில்
பொறுப்புடனே முடித்து வைக்கும் கடமையுடன்
பெரு முயற்சி செய்வேன் என்அன்புப் பாட்டி
உங்கள் உருவந்தான் மறைந்தது உள்ளமல்லவே
உங்கள் ஆத்மா ஆண்டவனடியில் அமைதி பெற்றிட வேண்டும்

அன்புப் பேத்தி
மயூரி விஜேயந்திரா
(நோர்வே)

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை: அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று.

Righteousness belongeth especially
to the married life: and a good
name is its ornament. -Thirukkural



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயாவும் அம்மாவும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அன்பின் ஊற்றாகி எம்மை ஆளாக்கி வைத்தவரே
ஆண்டு கோடி சென்றாலும் அழியாது உம் நினைவு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதை கூறும் வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால்
அதனைச் சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு
அதனை ஏற்றுக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சாகசப் பயணம்
அதனை மேற் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம்
அதனைக் கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம்
அதனைத் தாங்கிக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை
அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம்
அதனைக் கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல்
அதனைப் பாடுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம்
அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம்
அதனைப் புகழுடன் முடித்துக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதி மொழி
அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல்
அதனை அனபவியுங்கள்
வாழ்க்கை ஒரு காதல்
அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு
அதனை ஆராதியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு
அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம்
அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம்
அதற்கு விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு
அதனை எட்டிப் பிடியுங்கள்



Printed by Viveka 416-269-1994
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org